©
GOVERNMENT OF TAMIL NADU
2015

[Regd. No. TN/CCN/467/2013-14.
[R. Dis. No. 197/2009.
[Price : Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 10] CHENNAI, WEDNESDAY, MARCH 11, 2015
Maasi 27, Jaya, Thiruvalluvar Aandu-2046

# Part VI—Section 2

**Notifications of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### CONTENTS

*Pages.*

COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை.**

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், கண்டியாங்குப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. து. பாலகிருஷ்ணன் என்பவருக்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 204 (3)ன் கீழ் அதிகாரம் அளித்தது தொடர்பான அறிவிக்கை. 90

NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

## COLLECTORS AND LOCAL AUTHORITIES

### ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை.

**திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், கண்டியாங்குப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. து. பாலகிருஷ்ணன் என்பவருக்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 204 (3)ன் கீழ் அதிகாரம் அளித்தது தொடர்பான அறிவிக்கை.**

*[ந.க. எண் 1696/2014/அ2.]*

**No. VI(2)/47/2015.**

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கண்டியாங்குப்பம் கிராம ஊராட்சி மன்றத் தலைவர் அளித்த கோரிக்கை மற்றும் இப்பொருள் தொடர்பாக திருவண்ணாமலை ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களின் விசாரணை அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் என் உளத்தேர்வின்படி கண்டியாங்குப்பம் ஊராட்சியின் மொத்தமுள்ள ஆறு ஊராட்சி மன்ற உறுப்பினர்களில் இரண்டு உறுப்பினர்கள் தவிர ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் உள்ளிட்ட இதர நான்கு உறுப்பினர்களும் ஆகஸ்ட் 2014—ம் மாதம் முதல் ஊராட்சி கூட்ட அஜெண்டாவினை பெற்றுக்கொண்டு, வருகைப் பதிவேட்டில் மட்டும் கையொப்பமிட்டு ஊராட்சி மன்ற கூட்டங்களில் ஆஜராகி தீர்மான பதிவேட்டில் கையொப்பமிட தொடர்ந்து மறுத்து வருவதால் ஊராட்சி நிர்வாகம் முழுவதுமாக ஸ்தம்பித்துவிடும் என்பதைக் கருத்தில் கொண்டும், ஊராட்சி நிர்வாக நலன் கருதியும், கண்டியாங்குப்பம் பொதுமக்களின் நலன் கருதியும் ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 204 (3)—ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கண்டியாங்குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் / ஊராட்சிகளின் நிர்வாக அலுவலர் அவர்கள், நிபந்தனைகளுக்குட்பட்டு ஊராட்சிப் பணிகளை மேற்கொள்ளவும், ஆறு மாதங்களுக்கு மிகாமல் ஊராட்சி மன்ற கூட்டம் நடத்துவதற்கு விதிவிலக்கு அளித்தும், கிராம ஊராட்சி நிதியினை கையாளும் அதிகாரம் வழங்கியும் ஆணையிடப்படுகிறது. மேலும், இந்நேர்வில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்), திருவண்ணாமலை அவர்களின் முன் அனுமதி பெற்று செலவினங்கள் மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் கூடிய அனுமதி அளித்தும் ஆணையிடப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, சட்டப்பிரிவு எண்.262 (1)-ல் குறிப்பிட்டுள்ளவாறு இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்படுகிறது.

திருவண்ணாமலை,
2015 பிப்ரவரி 23.

**அ. ஞானசேகரன்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU